ப்ரஹ்மவித்யா.

௩-ம் புத்தகம்

பத்திராகிரயம்

1 வருஷம் 2—12—0
6 மாதம் 1—8—0
3 மாதம் 0—14—0
1 காபி - 0—2—6
இலங்கைக்கு 3—4—0.

ப்ரம்மவித்தியாபத்திரிகை.

மாதம் இருமுறை பிரசுரஞ் செய்யப்படும்

௰௩-ம் இலக்கம்

பத்திராகிரயத்தை மணியார்டராக வரவிடும்போது ரூ. 1-க்கு அணா 1. சேர்த்து தபால் லேபிலாவது சிதம்பரம் ப்ரம்மவித்தியாப்ரெஸ் மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

[illegible]

சிதம்பரம்:— ௧௮௮௮ வரு டிசம்பர் ௴ ௩௰ௗ சர்வதாரி வரு மார்கழி ௴ ௧௮உ

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

விளம்பரம்.

யாவர்க்கும் உபயோகம்!!

☞ ப்ரம்மவித்தியா தொடங்கியது முதல் இரண்டுவருடங்களாயிலுள்ள பத்திரிகைகளனைத்தும் ஒன்றாய்ச் சேர்க்கப்பட்டு, பைண்டுசெய்யப்பட்ட புத்தகங்கள் 150-இல் விலைபெற்றது போக பாக்கியுள்ள காப்பிகள் சொற்பமே; உள்ள காப்பிகளும் சொற்பமாதலின், ஒருவருடப்புத்தகம் 1-க்கு 2—8—0 ஆக இரண்டுவருடப்புத்தகங்கள் 5 ரூபாய்க்கு விற்கப்படும். வேண்டுவோர், போஸ்டேஜ் உள்பட 5—6—0 மாத்திரம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். போனால் வராது.

சரித்திரப்பயிற்சி.

பௌத்தமதக்குறைவு

(தொடர்பு)

முற்பத்திரிகையில் கௌதமனென்பவன் கபிலவாஸ்து என்னும்தேசத்திற் பிறந்ததும், புத்தனென்று வேறுநாமங்கொண்ட அவன் துறவிவேடம் பூண்டு இல்லறதர்மங்களை முற்றிலுந்துறந்து வனவாசம் புரிந்ததும், பயனில்லாமலே தேகக்கிலேசங்களை அனுபவித்து பெருகிய சனக்கூட்டத்திற்கு நாத்திகம் புகட்டி தூர்த்தமதத்தினாலுண்டாகிய ஆபத்தைத்தடுக்க முடியாமல் பரவியதுடன் மரித்ததும் வரையப்பட்டன. மேலும் இதை உண்டுபண்ணினவன் இறந்தபோதிலும் இம்மதம் வெகுவிரைவுடன் விருத்தியானதும், அக்காலத்தில் இத்தே… தவர் மதிமயங்கியவர்களாய் சிலர் பௌத்தர்களாயும், சி… ஷ்டர்களாயும், வேறு சிலர் தங்கள் தர்மங்களை நடத்து… ளாயினும், அத்தர்மங்களின் பிரயோஜனத்தில் சந்தேக… வர்களாயுமிருந்தார்களென்றும் எழுதப்பட்டது. பிறகு … தத்தை விருத்திசெய்யக் கணக்கற்ற சபையார்கள் நிறைந்… ஜனங்கள் கூட்டப்பட்டதும், அனேகம் அரசர்கள் இதற்… முயன்றதும், இத்தேசத்திலும் அயல்தேசங்களிலும் இ… பல உபதேசகர்களைக்கொண்டு உபதேசமடங்களைக்கட்… சுருக்கமாய் அசோகன் சரிதையும், ஆங்காங்கு இப்ப…

[illegible]

[illegible]

[illegible]

டத்தவர்கள் இக்காலத்தில் செய்துகொள்ளவேண்டிய சீர்திருத்தங்களும் எடுத்துரைக்கப்பட்டன. இப்பத்திரிகையில்பௌத்தமதத்தின் லோபத்தையும், அதை நிறைவேற்ற சங்கராசாரியர் போன்ற ஆசிரியர்கள் உண்டான விதத்தையும், நம்மதம்பெருககாரணபூதர்களான க்ஷத்திரியர்களின் பிறப்பையும், இருளில் தபனனுதித்தாற்போல அக்கினி குலமுண்டானதினால் இப்பாரதகண்டமுழுமையிலும் நம்மதம் தடையின்றிஜயமடைந்ததையும் தெரிந்தமட்டில் எழுதியிருக்கிறோம்.

பௌத்தமதம் எவ்வாறு மேன்மேலும் பெருகியதோ, அவ்வாறே அசோகனிறந்தபிறகு பரவவில்லை. ஆயினும் அங்ஙிறந்ததற்கு முன்னிருந்த அதேஸ்திதியில் கொஞ்சகாலம் தங்கிநின்றது. ஏனென்றால் வேகமாய் ஓடிக்கொண்டிருப்பவன் ஒருவன் சடுதியில் ஓரிடத்தில் நிற்க முடிகிறதில்லை. கொஞ்சதூரம் தனக்குத்தெரியாமல் சென்றே நிற்க சக்தியுள்ளவனாகிறான். உலகவழக்கமாயுள்ள இச்சுபாவம் மதவிஷயத்திலும் ஒவ்வுமல்லவா? அசோகனுக்குப் பிறகுவந்த அரசர்களும் பௌத்தர்கள்தான். இவர்கள் காலத்தில் இவ்விராச்சியத்தில் இம்மதம் மற்றையதேசங்களில் அக்காலத்தில் காணக்கிடைக்காத பதவியை அடைந்திருந்தது. இவ்வரசர்கள் பலிபத்திரம் முதற்கொண்டு சிந்துதேசம் வரையிலும், சிந்துதேசமுதற்கொண்டு மேற்கடல்கரையிலும் வெகுதூரமான விரண்டுமார்க்கங்களைச்செய்வித்தார்கள். இவர்கள் காலத்தில் மேற்றிசைவியாபாரம் அயல்தேசத்தவர்களுடன் அதிக அபிவிருத்தியை அடைந்தது. சிற்பசாஸ்திரங்களின் பரிசீலனையும் வெகுவாயுண்டாயிற்று. அதிகபணச்செலவுடன் கலைகளைப் படிப்பிக்கவும், தேசபாஷைகள்மூலமாய்ப் படிப்பைப்பரவச்செய்யவும் களிப்புடன்முயன்றார்கள். அசோகனுக்குப்பிறகு எவ்வரசர்கள் மகதராச்சியத்தை ஆண்டார்களென்றும், எவ்வளவுகாலம் அவர்கள் செங்கோலோச்சினார்களென்றும், எவர்கள் அவர்கள் மந்திரிகளாயும் சபையார்களாயும் இருந்தார்களென்றும், எவ்வருஷத்தில் மௌரியவம்ச முடிவுற்றதென்றும் கேட்பின், இந்தவிஷயங்களில் நிர்ணயம் புராணங்களினாலாவது, பௌத்தர்கள் சரித்திரங்களினாலாவது, அல்லது வேறு பிரபந்தங்களினாலாவது நன்றாய்ப் புலப்படவில்லை. ஆனால் இக்காலத்தில் சந்திரகுப்தன், இவர்கள் மகன் அசோகன் இவர்கள் ராச்சியமாண்டகாலங்களில் எழுதப்பட்டப் பிரபந்தங்கள் மாத்திரமே கொஞ்சங்கொஞ்சம் நமக்குக் கிடைக்கின்றன. மௌரியவம்சத்தின் இந்தமூன்றரசர்களைத்தவிர மற்றைய அரசர்களின சமாஜத்தைச்சேர்ந்த பண்டிதர்களாலும் கவிகளாலும் அநேகம் பிரபந்தங்கள் எழுதப்பட்டனவென்றே வேறுபாஷைகளைக்கற்ற வல்லவர்கள் நிச்சயிக்கிறார்கள். அப்பிரபந்தங்கள் பௌத்தமதத்தைக்குறித்தும் பௌத்தஅரசர்களைக் குறித்தும் இருந்தபடியாலும், ஸம்ஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருந்ததினாலும், ஆனையலது மற்றையதேசத்தவர்களுக்கு அறிய முடியாமற்போனபடியாலும், நம்மவர்களுக்கு நாத்திகத்தில் பிரியமின்மையால் அங்கீகரிக்கப்படாமலும், காண்டோபராலும், சங்கராசிரியர் அவர்களாலும், விக்கிரமன்முதலிய அரசர்களாலும் பௌத்தர்களைத்துறந்த அக்காலத்தில கொளுத்தப்பட்டும் வேறுவிதங்களினால் நாசம பண்ணப்பட்டும் போய்விட்டனவென்று சரித்திரக்காரர்கள் எண்ணுகிறார்கள். மௌரியவம்சத்தவர்கள் அரசாண்டகாலத்தில் பிரபந்தங்கள் இருந்தனவென்பதற்கும்பிரபந்தங்கள் இயற்றுந்திறமையுள்ள கவிகளிருந்தார்களென்பதற்

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

கும் சிலாலிகிதங்களாயுள்ள அக்ஷரங்களே பிரமாணம். இவ் விஷயத்தை எடுத்துரைத்தால் விரியுமென்று இம்மட்டில் நிறுத்தினேம்.

இம்மாதிரியாக மகதராசசியம் சிறிதுகாலம் ஹிந்துமதத்தையுடைத்தானதாயும், பிறகு அநீசுவரவாதிகளான பாஷண்டர்களால் கெடுக்கப்பட்டதாயும், விக்கிரமனுக்கு முன்னர் ஏறக்குறைய சுமார் 200. வருடங்களுக்குமுன் "சாக்கர்கள்,, என்று நாமதேயங்கொண்டவர்களுக்குக் குட்பட்டிருந்தது. இவர்கள் காலத்திலாயினும், விக்கிரமனுக்கு இருபது வருடங்களுக்குப்பின்னர் மகதசம்மாதனத்தைபெற்ற கண்வ வம்சத்தவர்களின் காலத்திலாயினும் பௌத்தமதமிளைத்ததேயில்லை. (இக்கண்வ வம்சத்தின் மூலபுருடனுன சகுந்தலாபோஷகனாயிருந்த கண்வனென்றெண்ணத்தக்கதல்ல) இவர்களுக்குப் பிறகு இவ்விராச்சியத்தையாளத்தோன்றிய பௌத்தர்களைக் கண்டிப்பவர்களான ஆந்திரர்கள் காலத்தில் இம்மதம் சிறிது சிறிதாக மறையத்தோன்றிற்று. ஆந்திரர்களுக்குப்பின்னர் கன்னியாகுப்ஜம் முதலிய அநேக இராச்சியங்கள் மகிமையையடைந்தன. அவைகள் முன்னுக்குவர மகத இராச்சியமும் பரதகண்டமென்னும் நாடகசாலையிலிருந்து பிறகு படுதாவின் பின் வாங்கியது.

இந்தராச்சியமும் நாசமடைந்ததோடு செங்கோல் நெறிமுறைமைதவறாது வழுவினபோதிலும் பெரியோர்களனுகூலங்குறைந்தபோதிலும், மேற்றிசையில் வியாபாரம் குன்றியபோதிலும், பௌத்தமதம் குறைவையடைந்த ஒருவிஷயமே அவர்களைச் சந்தோஷித்தது. இம்மதத்திற்கு முக்கியவிடமாயிருந்த மகதம் பௌத்தமதத்திற் குறைவையடைந்ததும், பரதகண்டமென்கும் மானவதர்மமென்கிற பெருவிருக்ஷம் முன்னோர்களானபக்ஷிகள் குடியிருக்கவும், ஆகாரம் பெறவும் விசேஷமாய்புஷ்பிக்கவுந் தழைக்கவும் ஆரம்பித்தது. பௌத்தமதம் ராச்சியமதமாயிருந்தது என்பதினால் இந்தமதமே எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டதென்று எண்ணத்தக்கதன்று. இம்மதம் மிகவும் உயர்ந்தபதவியிலிருந்தகாலத்திலும் எவ்வளவு பௌத்தர்கள் இருந்தார்களோ அவ்வளவே நம்மதத்தைச் சேர்ந்தவர்களுமிருந்தார்கள். இஃதிங்ஙனமிருக்க, எங்கும் பரவியதெனறுரைக்கக் காரணம்யாதெனில், புத்திர மித்திர களத்திர விஷயங்களான உலகசுகத்தில் குறையாதவனுடைய ஒருபிள்ளை கொஞ்சசதனம், அல்லது வேறு எதாகிலும் அருமையானவஸ்துவைகளை இழந்தால் "இவன் முழுமையும் நாசமடைந்துவிட்டான், இவன் பிழைக்க வேறுவழியில்லை,, என்று சொல்லப்படுவதுபோல, வேறுமதம் வருவதினால் நம்மதம் பாதியாய்க்குறைந்தபோதிலும் அது முற்றிலும் அழிந்தது. அயல்மதங்களெட்பிற்றென்று சரித்திரககாரர்களால் சொல்லப்படுகிறது. மகதராச்சியம் அழியும்வரையில்முன்னுக்குவரும்மதங்கள் பௌருஷத்தை வெளியிடவும் சக்தியில்லாதவர்களாயிருந்[illegible]க்கள் பௌத்தர்கள் பின்னிட்டசமயத்தில் வேறு மத[illegible]லைக்க இதேசமயமென றெண்ணியும், அதை நிறைவே[illegible] பலசாலிகளான அரசர்களால் முடிக்கத்தக்கதென்று[illegible]து "பரசுராமனை செய்துகொண்ட கோறணியான [illegible]

[illegible]

தினால் நாசம்பண்ணப்பட்ட க்ஷத்திரியர்களின் பூண்டையும் காணாமல் அவர்களை உண்டுபண்ணவே முயலவேண்டும்,, என்றஅந்தவிஷயமாகவே முயன்றார்கள். அந்தப் பாஷண்டர்களான பைசாசங்களைத் துரத்த மாந்திரிகர்கள்போல் தோன்றியவர்களை எம்மாதிரியாகவுண்டாக்கினார்களென்று பின்வருங் கதை வெளிப்படுத்துகின்றது.

மேருபர்வதத்தின் அருகாமையில் தபசுபுரிந்துகொண்டிருந்த மகரிஷிகளுக்குள் இந்த பூமியைக்குறித்து ஒருகாலத்தில வார்த்தை உண்டாயிற்று; அப்பொழுது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் இவ்வுலக வியாபாரத்தைப் பாவிக்கவும், உலகநன்மைக்காகவே தீக்ஷைபெற்றும் ஜந்துக்களுக்குக் கெடுதிநேரிடுங்காலத்தில் பரிகைபோன்ற வலக்கையால் அபயம் கொடுப்பவர்களாகவும், ஏனையவர்கள் சௌக்கியத்தினால் தங்களுக்குச் சௌக்கியமென்று எண்ணுகிற அந்த பாகவதர்கள் பாரதர்களுக்கு இம்மாதிரியான நாசத்தினால் மனங்கலங்கி, அப்பொழுது உண்டான ஆபத்திற்குத் தங்களையே காரணமாய் நினைத்து "இனிமேல் நாம் தடஸ்தர்களாயிருப்பது நியாயமன்று; அப்படிச் செய்தால் இந்தப்பூமியானது க்ஷத்திரியர்களில்லாமல் மிகவும் கெடும்; இக்கெடுதியைத் தடுக்க சேஷசயனனை சரணமாக அடைவோ"மென்றெண்ணி திருப்பாற்கடலின் கரையை அடைந்து தாங்கள்வந்தகாரணத்தை மனதை உருக்கத்தக்க வார்த்தைகளினால் ஸ்துதிபூர்வமாய் உரைத்தார்கள். பகவானும் இவர்களின் சரசமான விஞ்ஞாபனத்தைக் கேட்டு நல்லமதத்தின் கெடுதியான பிரபலமான உஷ்ணத்தினால் தபிக்கும் அவர்கள் சர்வாங்கங்களையும் குளிரச்செய்யும் வார்த்தைகளினால் பிரசித்தமான க்ஷத்திரியவம்சங்களைச் செய்யுங்களென்று சொல்லிவிட்டு விரைவில் மறைந்தருளினர். சர்வேசுவரன்மறைந்ததும் ஆபன்ன பராயணர்களான தாபசர்கள் மேருகிரியின் சிகரத்தைஅடைந்து கங்கை நீரினால் யாகாக்கினியை சுத்தம்செய்து மிகவும் ஆச்சரியகரமான ஒருயாகத்தை ஆரம்பித்தார்கள். இம்மாதிரியாய் ஆரம்பிக்கப்பட்டுப் பரிசுத்தர்களான மகரிஷிகளினால் வெகுஆவலுடன் நடத்தப்படவும் வெகுகாலமாகியும் எண்ணிய பலனைக் காட்டாதவுமான யாகத்தினால் ரொம்பவும் கிலேசத்தைஅடைந்த தீக்ஷிதர்கள் ஒன்றாய்க்கூடி விண்ணையும் மண்ணையும் அளாவும் ஸ்துதிபரம்பரையால் புருஷோத்தமனைத் துதித்தார்கள். அப்பொழுது யாகசாலையின் மத்தியில் கொழுந்துவிட்டெரியும் அக்கினியினின்று கமனீயம்போன்ற காந்தியையுடையவும், வரிசைவரிசையாய் அலைபோல் இலங்கும் பட்டுவஸ்திரம் தரித்தவும், நாணிற்குநடுவில் ஏறிட்டிருக்கும் அம்போடுகூடிய வில்லை இருகைகளினால் தரித்தவும், உள்ளிட்டிருக்கும் பெருஞ் சத்தியோடு கூடிய கோசத்தைப் பார்சத்தில் தொங்கவிட்டவர்களானவும், இரண்டுதோள்களிலும் கட்டப்பட்டு விசித்திரமாயிருக்கும் சாஸ்திரம் அஸ்திரம் முதலியவைகள் நிறைந்த தூணீரத்தோடுகூடியவும், ஸிம்மநாதத்தினால் கிடுகிடுக்கின்ற யாகசாலையில் "சண்டாளர்கள் எங்கே? பாஷண்டர்கள் எங்கே? அனீசுவரவாதிகள் எங்கே?" என்று கர்ச்சித்துக்கொண்டும், வீரியத்தோடுகூடிய சிம்மங்களைப்போன்ற நடையை அடைந்தும், தனதழகினால் மன்மதனழகைத் தோல்வியடையும்படியும் ஜ்வலிக்கின்ற மலைபோன்ற நான்கு க்ஷத்திரியர்கள் தோன்றினார்கள்.

[வரும்]

𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾.

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா.

சர்வதாரிஸு மார்கழிமீ ௧௮உ திங்கட்கிழமை

விக்கிரகாராதனம்

(முன்றொடர்பு)

ஐய, கடவுள் உருவமற்றவனென்று மற்றவ ராக்ஷேபத்திற்குச் சமாதானங் கூறினோமல்லவா? இனிவிரண்டாங் கேள்விக்குச் சமாதானமளிப்பது இப்பொழுது முறையாதலால் அதைப் பற்றிச் சிறிது கூறுவாம்:

இவ்விரண்டாங் கேள்வியின்கண் அவர் மறைநெறி யறியாமை வெளிபடுகின்றது. எங்ஙனமெனில், "வேதங்களில்" என்றுதொடங்கிய விரண்டாவது கேள்வியில் "விதிகளெல்லாம் மந்திரங்களால் காட்டும்" வென்றார்கள். இதை யாராயின், இவர் வேதமோதியவரின் ஊரில்கூடப் புகுந்திருக்கமாட்டாரெனப் புலப்படுகின்றது. என்னே! மந்திரம் வேறு, விதிவேறென்று இவரறியாது எம்மனோரை விளித்து மந்திரங்களில் விதியைக் காட்டென்றார். இற்றைக்குச் சமயம்நேர்ந்ததால் மந்திரவிதிகளைப்பற்றிச் சிறிதுரைப்பாம். வேதங்களைப்பொருட்படுத்தும் வழி பின்வருமாறு:—

வேதங்களில் சொற்கள் மூன்றுவகுப்புள்ளன. அவை மந்திரங்கள், அர்த்தவாதங்கள், விதிகளென முறையே கூறப்படுகின்றன. அவற்றுள் மந்திரங்களென்பவை, ஏதேனுமோர் பொருளை விதிப்பதுமில்லை; விலக்குவதுமில்லை. மற்றைவிதிகளால் குறிப்பிட்ட கன்மங்களின் முறையைக்காட்டவெழுந்து அங்ஙனம் விதிக்கப்பட்ட கன்மங்களின் அங்கங்களாக நின்றுள்ளன. அதுகொண்டே "மந்திரங்களனுட்டிக்கவேண்டிய பொருட்களை விளக்குவன" என்றான்றோர் கூற்று. விதிகளோ! நேரிலொவ்வொருபொருளையும் செய்யற்பாலனவல்லவென்றுங் குறிக்கின்றன. அர்த்தவாதங்கள் அவ்வக்கன்மங்களைப் புகழ்கின்றன. இவைகட்கு முறையே உதாரணங்கள் "அக்நிமீளே புரோஹிதம் யஜ்ஞஸ்ய தேவம்ருத்விஜம் ஹோதாரம் ரத்னதாதமம்" அக்கினிமீளே புரோஹிதம் யக்ஞஸ்ய தேவம்ருத்விஜம் ஹோதாரம் ரத்னதாதமம், [இ-ள் அக்கினியைத்துதிப்பேன், அவன்யக்ஞத்திற்குத்தேவன், அதிபதி, ஹோமத்தை முடிப்பவன், இரத்தினங்களைக் கொடுப்பவன் என்பவை] இம்மந்திரம்ஒருகாரியத்தை விதிப்பதுமில்லை; விலக்குவதுமில்லை. ஆயினும், மற்றைவிதிகளால் ஏற்படுத்தப்பட்ட யக்ஞமென்னுமோர் கன்மத்தின் அங்கமாய அக்கினியின் தோத்திரத்தை மட்டும் அக்கன்மத்தின் அங்கங்களை நிறப்பி அதனங்கமாய் நிற்கின்றது. எங்ஙனமெனில், "அக்கினிமீளே" என்றதொடக்கத்தின் மந்திரங்களால் யக்ஞத்திற்கு தேவனும் அதிபதியுமான அக்கினியைத் துதிக்கட்புகின், அனிச்சொற்களின் பொருளறியாவிடம் சொற்றொடரின் றொகைப் பொருட்புலப்படுவது கூடாமையின், அறியவேண்டிய யக்ஞமென்னுஞ் சொல்லின் பொருள் இத்தன்மைத்தென விசாரித்தலவசியமாதலால் அந்த யக்ஞத்தை விதிக்கும் விதியை முன்னறிந்து பின்னரே இம்மந்திரத்தை வெளியிடவேண்டும். இனி மந்திரப்பொருளை முற்றிலு மறிந்தபின்னர் இம்மந்திரம் பிறிதொருகன்மத்திற் சங்கமாகின்றது.

[illegible]

விதியே! மந்திரங்களைப்போல அவாந்திலமைகொண்டு ஏனைய வற்றை அவாவாது. 'ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத நஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி' "ஜ்யோதிஷ்டோமே ஸ்வர்க்ககாமோயஜேத நஹிம்ஸ்யாத்ஸர்வபூதாநி" [இதன்பொருள்: சுவர்க்கத்தைவிரும்புவோன் ஜ்யோதிட்டோமயாகத்தைச் செய்யக்கடவன்; எவ்வித உயிர்களையும் வருத்தல் கூடாது] என்றுதொடங்கி ஒவ்வொருபொருட்களை விதிக்கவும் விலக்கவும் ஒழிகின்றது. ஆத்ரவாதங்களே! 'வாயவ்யம் ச்வேதமாலபேத பூதிகாம:' 'வாயுர்வை க்ஷேபிஷ்டா தேவதா' இதன்பொருள் (வாயுவல்லவோ வுயர்ந்த தேவதை) என்றுதொடங்கி கன்மங்களை படைக்கின்றது. ஆகையால் மந்திரங்கள் குறித்து ஒவ்வொரு கன்மங்களைக்கூற, அங்கு விதி அகப்படாவிடில் விதி கற்பித்தல் வேண்டியா. அவ்விதம் நிகழும்விஷயத்தில் பிம்பத்தி லமைத்த கடவுளுக்குச் செய்யவேண்டிய பிரதக்ஷணம், நமஸ்காரமுதலிய மற்றவுபசாரங்களை எடுத்துக்குறிக்கும் மந்திரங்களுள்ளவாதலால், அவ்விடம் "பிம்பத்திற கடவுளை வழிபடுக" என்றோர் விதி கற்பிக்கப்படவேண்டுவதே. அம்மந்திரங்களை மேலெடுத்துக் கூறுவாம். எங்கும் மந்திரங்கள், ஒவ்வொன்றையும் விதித்தல் விலக்குதல் என்பனவைப் கைக்கொள்ளாமையால் வேதமித்தத்தி நம்மைக்கேட்கும் அவ்வாரியசமாஜத்தினரேனும், யாம் காட்டிய இவ்வழியை மறக்கவேணும்; அல்லது நான்குவேதங்களிலுள்ள மந்திரங்களுள் ஒன்றாவது ஓர்கன்மத்தை எடுத்து விதிக்கவேணும் விலக்கவேணுமுள்ளதாக எடுத்து காட்டவாற்றலற்றவரென்பதே எமது துணிபு. இனி வேதங்களுள் மந்திரங்கள் ஏதேனும் பிம்பத்தின்கண்ணே கடவுளை வழிபடும் வழியாய முழங்கணக்கல் முதலியவற்றை எடுத்துக் கூறுபாம் கண்டிலேமென ஏனையவர் விருதுகூறுவரேல், யாமுன்னின்று அவைகளைக் குறித்தும் அநேகமந்திரங்களை எடுத்துக் காட்டுவாம். இனி மந்திரங்களைப் பின்வருமாறு காண்க:—

இருக்குவேதத்தில் '[illegible] ... ஜிஹ்வயா ஸ்வாதும் அந்தரிச்சந்திதஞ்சனெரு த்திரமபரோபநீஷயாகிரக்ணந்த்ஜிக்வயாஸ்ஸப்;' என்றோர் மந்திரமுளது. இதன்பொருள்: 'ஜநே, மனிதர்களுள் [இவ்விடம் ஜனம் என்னும் சொல் தன்மைப்பெயராகின்ற அத்தன்மைபெற்ற ஓர்தொகுதியைக் குறிக்கின்றதாதலால் ஒருமைப்பன்மையாய்க்கொள்க. அதாவது, ஜனத்தினென்பது ஜனங்களிலென்றுசித்திக்கும்.' [illegible], பேன்மைபொருந்தியவனை [எனவே இரண்டாம்வேற்றுமைக்கு முதல்வேற்றுமை ஆதேசமாய் வேதத்திற் சிறப்புவிதியால் வந்ததென்றுகொள்க] [illegible] உமாதேவியுடன்கூடி உலகத்திலுள்ள உண்மைத்தொண்டர்களுய்யுமாறு பேரருட்டிருவுருவம்பெற்றவனை [அத்திருவுருவமற்றவன் அறிவிற்கு எட்டாதவன் என்பதாலென்க] [illegible] தியானித்தலால் திருவுளத்தில், [illegible] ப்பவர்கள்; 'ஜிஹ்வயா' நாவினால், ஸ்வாதும், சுவைபொருந்திய சோற்றை [illegible] திவட்கொள்வார்கள் என்பது. இஃது இம்மந்திரந்தாம் அருஞ்சுவைபொருந்திய ஆகாரம் அருந்துவதற்குமுன் கடவுளை வழிபட்டொழுகவேண்டுமென்றெடுத்துக் குறிக்கின்றது. இனி இம்மந்திரமும் மனோவியாபாரமாகிய தியானத்தைக் குறிக்கின்றதேயன்றி சரீரவியாபாரமாகிற நமஸ்காரமுதலிய சரீரவியாபாரத்தைக்குறிக்கவில்லையே என்று வினவின்,

ருத்ரஸ்யைவ பிம்பஸ்ய நிஷ்கலஸ்ய நிர்மலத்வ 'ஶிவ:' இதி 'யோ ருத்ரோ விஶ்வா புவநாவிவேஶ' (ஸர்வ...தேவ ஶக்திம் ஸாமாந்ய...) விஶ்வத்வேந ஸ்வாமிநா... ஸ்வரூபேண... 'தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' தாத்பர்யாய (ஸர்வ...) ருத்ராய நமோ ஸர்வ... பக்தைர்... விஷயதயா... விஷயதாவாதிநாம் ... ப்ரஸித்தம் 'ஸர்வம் ஶிவமயம்' இதி பிம்பம் ... நிகாயிகம் ... விபத்து: ... யதா 'தமுஷ்டுஹி' இத்யாதி: 'தமு ஷ்டுஹி' 'ஸ்விஷு: ஸுதந்வா' (...) ... 'யோ விஶ்வஸ்ய க்ஷயதி பேஷஜஸ்ய' இதி ... 'ருத்ராய நமோ அஸ்து' இத்யாதிஶ்ருதிஷு ... (...) ... இதி 'யக்ஷ்வாமஹே ஸௌமநஸாய ருத்ரம்' ... (யஜ ...) ... 'நமோபிர்தேவமஸுரம் துவஸ்ய' ... 'தம் தேவம்' ... 'ஸ்விஷு:' ... ஜீவாத்... ஸ்வரூபேண ... பிம்பே ... ஶிவ ... விஷயேண ... ஸாதநம் ... 'தஸ்மை ருத்ராய நமோ அஸ்து' இதி ... ஸர்வத்ர ...

அவ்விதக்குறிப்புள்ள மந்திரங்களையும் ஈண்டு எடுத்துரைப்போம். யஜுர்வேதத்தில் நான்காம் காண்டத்தில் உருத்திரசங்கிதையின்கண்ணே உள்ள மந்திரமிது:— "தமு ஷ்டுஹி ய: ஸ்விஷு: ஸுதந்வா யோ விஶ்வஸ்ய க்ஷயதி பேஷஜஸ்ய யக்ஷ்வாமஹே ஸௌமநஸாய ருத்ரம் நமோபிர்தேவமஸுரம் துவஸ்ய,, தமுஷ்டுஹி யஸ்விஷு: ஸுதந்வா யோ விச்வஸ்ய க்ஷயதி பேஷஜஸ்ய யக்ஷ்வாமஹே ஸௌமநஸாய ருத்ரம் நமோபிர்தேவமஸுரம் துவஸ்ய,, இம்மந்திரம் தெளிவாய் கடவுள் தொண்டர்கள் பாவனைக்கேற்ற உருவம் பெறுவனென்றும், அவனை மனவாக்குக் காயங்களால் பூசித்தல் அவசியமென்றும் விளக்குகின்றது. இம்மந்திரத்திற்கு முன் மந்திரமும் கடவுள் உலகெலாம் சரீரமாகப்பெற்றவனென்றும் விளக்குகின்றது. எங்ஙனமெனில், "யோ ருத்ரோ அக்நௌ யோ அப்ஸு ய ஓஷதீஷு யோ ருத்ரோ விஶ்வா புவநாவிவேஶ தஸ்மை ருத்ராய நமோ அஸ்து,, யோருத்ரோ அக்நௌ யோ அப்ஸு ய ஓஷதீஷு யோ ருத்ரோ விச்வா புவநாவிவேச தஸ்மை ருத்ராய நமோ அஸ்து,, இதன்பொருள்: 'ய:' எந்த 'ருத்ர:' ருத்திரன் [அசுபத்தை அகற்றிச் சுபத்தைக்கொடுப்பவன்] 'அக்நௌ' அக்கினியின்கண்ணுள்ளான் [அந்தணர்களுக்கு அக்கினியில் விருப்பாகுகையால்] 'அப்ஸு', தண்ணீரின்கண்ணுள்ளான் [கலசம் முதலியவற்றில் பூசித்தார்க்கென்க] 'ய ஓஷதீஷு', ஓஷதிகளுக்குளுள்ளான் [அரசு கொன்றை. வில்வம் முதலியவற்றிலும் சிவபூசை விதித்திருப்பதாலென்க.] அதுகொண்டே "சிவலிங்கம், குருசரீரம், சிவனடியார் திருமேனி, கொன்றை வில்வம் இவற்றுள்ளும் சிவன் எப்பொழுதுமிருப்பான்,, என்றுபுராணங் கூறுகின்றது. 'யோ ருத்ரோ விஶ்வா புவநாவிவேஶ', உலகத்திலுள்ளபொருள் அநேகங்களில் பிரவேசித்தான் [எங்கும்பாவிக்கும் பரமபக்தரின்பொருட்டு உலகத்திலுள்ள உலோகம், மண், கல், சூரியன், தனைமுதலியவைகளில் பிரவேசித்தான் என்பது கருத்து] 'தஸ்மை ருத்ராய நமோ அஸ்து,, அவ்விதம் தொண்டர்களை ஆட்கொள்ள பலதிருமேனிகளைத்தாங்கி எங்கும் நிறைந்துநிற்கும் அப்பரமனுக்கு அநேகவந்தனம்,, என்பது. இம்மந்திரம், ஆராயுங்கால் உலகெலாங்கடந்து உணர்ப்பொருள் உள்ளத்திற்கெட்டாதாகையால், அப்பரம்பொருளே நம்மவர்க்குப் புலப்பட்டபொருட்களில் பேரருட்பெருக்கத்தால் ஆவிர்ப்பவித்ததாக விளக்கி அவனை அவ்வப்பொருட்களின்கண் பூஜிக்கவேண்டுமென்று குறிக்கின்றது. இனி இம்மந்திரம், கடவுளை உலகப்பொருட்களில் அனைத்திலும் பாவிக்கும்படி விதிக்கின்றதேயன்றி அவனை சாயத்தாலுபசரித்தல் ஆகிய பூஜையை விதிக்கவில்லை; ஏனெனில் அவ்வாசங்கையையும் அடுத்தமந்திரம் ஒழிக்கின்றது. அதன்பொருள் வருமாறு காண்க: "தமு ஷ்டுஹி,, முன்மந்திரத்திற்கூறியபடி யாம் காணக்கூடிய பொருட்களில் ஆவிர்ப்பவித்த அப்பரமனைத் தோத்திரஞ்செய் [என்பதால் பரமேசுரனைத் தோத்திரஞ்செய்தலாய வாசகபூசை சொல்லப்பட்டது] இவ்விடம் துதிக்கும்படி எடுத்தோதியது, அருபமான கடவுளையோ என்று ஆசங்கைநிகழின் அதைமறுக்கின்றார்: "ய: ஸ்விஷு:,, எவன் நல்லஅம்புகளைத்தாங்கியவன் "ஸுதந்வா,, நல்லவில்லுடையான்; "யோ விஶ்வஸ்ய க்ஷயதி பேஷஜஸ்ய,, 'எவன்

[illegible]

மருந்துகளிலடங்காப் பெரும்பிணியான பாவத்தையொழிக்கும் பேரௌஷதம்,, [இதனால் அவன் உருவம்பெற்றவன் எனப்புலப்பட்டது] "[illegible]" எமது மனஞ்சுத்தியடைய ஸ்ரீருத்திரனைப் பூஜிப்போம். [இதனுள்ள 'யஜ், என்னும்வடமொழிச்சொல் தேவபூஜைசெய்தலைப்பொருளாகக்கொண்டது. "யஜ யென்பது தேவபூஜையையுணர்த்தும்,, என்று பாணினியுரைத்தலால் காண்க] இதனால் சிவனை மனதால்பாவித்தலாகியமானஸிகபூஜை எடுத்தோதப்பட்டது [illegible],, எமது பிராணவாயுவைவயிரேட்பிவிக்கும் பரமனை அநேக நமஸ்காரங்களால் உபசரித்தல் வேண்டும். இதனால் சரீரத்தால் செய்யக்கூடிய நமஸ்காரம் முதலிய காயிக பூஜைசொல்லப்பட்டது. ஆகையாலிம்மந்திரம் வாசிகம், காயிகம், மானஸிகம் ஆகியமூன்றுவிதபூஜைகளையும் குறித்து ஜீவர்களுக்காணையிடுகின்றது. ஆதலாற்றான்வரும் மந்திரத்தில் "கை சிவனைத்தொடுகின்றது,, என்றுளது. பிம்பமுதலியவற்றில் ஆவிர்ப்பவிக்காத சிவனை கையாற்றொட்டாசித்தல் கூடாமையினென்க. அம்மந்திரத்திற்கதே பொருளாகை யாற்றான் ஸ்ரீபோதாயனமுனிவர் சிவபூஜை விதிக்குமிடம் நிர்மால்யங்களை ஒதுக்கும் விஷயத்தில் இம்மந்திரத்தை விநியோகித்தார். விநியோகித்தவழி மந்திரங்களுக்குப் பொருளுணாக்கும்படி "வசனத்தால் வேறுபொருள்கொண்டது ஐந்திரியம்,, என்னுஞ் சூத்திரத்தால் பூர்வமீமாஞ்சையில் ஸ்ரீஜைமுனி ரிஷி கூறியுள்ளாராகையால், இம்மந்திரத்தின் பொருளிது என்பதாம் "[illegible] இக்கைசிவனைத்தொட்டது [ஆகையால்] "[illegible],, இப்பரமன் எம்மிடம் ஷட்குணங்களையும்பயனபடுத்தி எமக்குத் தீராப்பிணியான பவரோகத்தைத் தீர்ப்பானுக என்பது. முனமந்திரத்தில் "இவர் பவரோகத்தை ஒழிப்பவர்,, என்றிருப்பதால் இங்கும் அங்ஙனமேயெடுத்தோதலாயிற்று. ஆதலாற்றான் தென்னாட்டிற் பிறந்த மூன்னுசிரியருள் ஒருவரான ஸ்ரீமத் ஹரதத்தாச்சாரியசுவாமிகள் "[illegible] என்னும்மந்திரத்தால் வாசிகம், மானசிகம், காயிகம் ஆகிய மூவகைப்பட்ட உமதுபூஜை விதிக்கப்பட்டது,, என்றார். சிற்ப கடவுள் கல்முதலியவற்றில் ஆவிர்ப்பவிப்பார் எனபதும் [illegible] என்றற்றொடக்கத்தின் மந்திரங்களால் சித்திக்கின்றது. இம்மந்திரங்களின்பொருள் ஒருவாறு முன்னமே இவ்விஷயத்தைப்பற்றி வரைந்த ஓர் உபந்யாசத்தில் நமது ஸ்ரீசுந்திரராஜ சாஸ்திரியாரவர்கள் எடுத்துரைத்தார். ஆயினும அவர் குறிப்பாய்க்காட்டிய சைவபாஷ்யக்கியானம் ஒன்றுமட்டில் இங்கெழுதப்படும். "[illegible],, வீரர்களை ஆள்பவன்,, உன்னிலும்வீரன் ஒருவனுளனோ? என்றுதொடங்கிய வேதவாக்கியங்களால் வீரன் என்று சொல்லப்பட்டவன் "[illegible],, விளையாட்டாய் [தேவ என்பது விளையாட்டைப் பொருளாகக்கொண்ட 'திவு' என்னும் வடமொழிப் பகுதியின்றிருபு] [illegible],, லிங்கம் முதலிய சற்களில் தோன்றவான். ஆகையால் '[illegible],, 'முடிவில் எல்லாவற்றையும் உள்ளடக்கியவன், என்றுதொடங்கிய வசனங்களால் உலகம் அனைத்தையும் தம்முள்ஒடுக்கும்வழி ஒடுக்குபவன் "[illegible],, சிவனெனனும்பெயருடையான் [illegible] உண்மை உலகெலாம் நிறைந்த விபு

[illegible]

ப்பொருள் "உதவொஷ:,, ஆயினும் தொண்டர் உள்ளங்களிற் கூத்துச்செய்பவன் "ஐஹாமஹ்,, இப்பிடத்தில் எழுந்தருள்வானாக,, என்பதும். "விஶ்வகர்மேவ;,, 'இருஷணபிங்கலன்,, என்பதாதியான வேதவாக்கியங்களால் பொன்னார்மேனியன் 'விரூபாக்ஷ,, [ஆயுள் சூக்தத்தில் ஆயுளுக்கு தேவதையாகக் கூறப்பட்டமையால்] ஆயுளையளிப்பவன் "ஸஹஸ்ராக்ஷ,, சுகமே எக்காத்தக்கவன் (பிடரூபம் எய்தியதாலென்க)' என்பதுமே. மற்றது முன்போலறிபற்பாலது. ஆதலால் வேதங்களில் மந்திரபாகங்களிற்றானே கன்முதலியவற்றில் கடவுளை வழிபடுதல் சொல்லப்பட்டமையறிக. அவருக்கு மூர்த்திகள் அனேகமாதலால் மனிதனைப் போன்ற பிரபஞ்ச செய்யவேண்டுமெனபதவசியமில்லை. அவயவங்களின் சங்கியையச் சிற்பத்திற்காணக.

[மற்றது வரும்.]

கடவுள்.

தொடர்பு.

பிறகு கேட்கிறது. "அது பூதங்களாகாதா?" என்று. இதன் கருத்து: உலகத்தின்கண் யாம்பார்க்கும் பதார்த்தங்களெல்லாம் ஐம்பூதங்களின் தொகுதியாலுண்டாகப் பார்க்கநேருகின்றதேயன்றி அவற்றின் தொகுதியன்றி வேறேபாரப்பதாய் நேருவதில்லை. சிலே, சரீரம் முதலியவைகளை உற்று நோக்கில் ஐம்பூதங்களின் கூட்டமே. இவைகள் உண்டாகும்போது ஓர் அறிவுடையவனசெயல் இருப்பதாகத் தெரிய வருவதில்லை. அங்கு கண்டகாரணம் "பூதங்களே" இனிநீர் கூறும்வழி கடவுள ஒருவர் உண்டு ஆயினும், அவரும் இப்பூதங்களின் சகாயமின்றி ஒன்றையும் உண்டுபண்ணார். ஆயின, அவைகளே போதுமானகாரணம்; உலகத்தில மண் நீர் முதலிய கருவிகளாலும் அக்கினி பாகத்தாலும் ஓர் குடம் உண்டாகுமாயினும் அவ்விஷயத்தில கடவுள் செய்கை எதுக்கு? இனி பெரும்பொருளான பூமண்டலமுதலியவை உண்டாகக் கடவுள் வேண்டுமெனினும் அதுவும் ஒவ்வாது. சூக்கும பூதங்களே ஸ்தூலபூதங்களை உண்டுபண்ணுமாகையால் அதற்கென ஒருபெரும்பொருளை ஒப்பவும் வேண்டுமா? அப் பூதகாரியங்களும் உம்மதத்தில் கடவுள் சித்தியராய் அமைந்ததுபோல் சித்தியங்களென்றே ஒப்புவோம். அப்பூதங்களையும் ஆராயின் ஐந்து என்றாவது நான்கென்றாவது, மூன்றென்றாவது, இரண்டென்றாவது, அல்லது ஒன்றென்றாவது துணியப்படவில்லை. ஒவ்வோர் சார்பார் ஒவ்வோர்விதம் சொல்லுகின்றார்கள். அவற்றுள் பூதங்கள் ஐந்து என்பவர்கள் பௌத்தர்களுள் சிலர், ஆருகதர் நையாயிகர் முதலிய சிலர், பூதங்கள் நான்கென்பார்கள். இனி சாந்தோக்கியம் முதலிய நூல்களைப் படித்து அதனுட்கருத்தை அறிந்தவர் பூதங்கள் மூன்றே என்பர். தற்காலத்தவருட் சிலர் இரண்டென்றும், சிலர் ஒன்று என்றும் கூறிகின்றனர். எவ்விதமாயினும் பூதங்களே உலகக் காரணம் என்பதற்குத் தடை ஒன்றுங்காணாமையால் கடவுள் ஒருவர் வேண்டுமென்பது அவசியமில்லை. இனிப் பூதங்களே காரணமென்றாலும், உலகம் ஒரேமுறையில் ஒரேதடவையில் உண்டாகாமையானும், ஒரேபொருளின் திரிபாய் இல்லாமையானும் காலமும் சுபாவமும் உடன்காரணங்

[illegible]

ஸம்ஸ்க்ருதபாஷா.

வ்யாகரணம்

[அநுபந்த:]

[illegible]

களென்றும் ஒப்புவோம். கன்மமும் தற்செயலும் காரணமாவதுமட்டில் கூடாது என்பதே. இதற்குச் சமாதானமிது:—

காலம் சுபாவம் இவை காரணங்களாவதுபோல மற்றபூதங்களுமே காரணங்களாகில் அதில் எமக்கும் ஆக்ஷேபம் ஒன்றுமில்லை. அவைகள்மட்டில் உலகத்திற்குக் காரணம் என்பதுமட்டில் அமைவது அரிது. என்னையெனில், உலகத்தில் முன்னில்லாதுண்டானவையெல்லாம் ஓர் சேதனன் செயலன்றி உண்டாகக் கண்டோமில்லை. இனிப் பூதங்களே சேதனங்களென்று சாதிப்பீரேல் உமது வாதம் ஓர்வழி மணம்பெற்றாலும் பெறும். அஃது ஓர்வழியும் அமையாதென்பது, யாம்புத்தியைப்பற்றிச் செய்த உபந்நியாசத்திலே சாதிக்கப்பட்டது. ஆதலால் ஆராயுங்கால் அறிவு என்பது சிறிதுமற்றபூதங்கள் உலகத்திற்குக்காரணமாவது எவ்வாற்றானுமியையாது. மண் முதலியவை குடம் முதலியவற்றிற்குக் காரணமாயினும் அவைகள் அறிவுடைய ஒருவன் செயலின்றி அத்தன்மை அமையப்பெறாதபடியால் சேதனன்செயலே காரியத்திற்குமுக்கியகாரணம். யாம் காணாநின்ற இப்பூமண்டலமும் காரியமென்பதைப்பற்றி முன்னரே விளக்கினோம். அவ்வழியை "உலகங் காரியமா?" என்னுங் கேள்வியை மறுத்துவிடத்துக் கண்டுதெளிக. ஆதலால் அசேதனங்களான பூதம் முதலியவை தனியே காரணங்களாகாமையால் சர்வங்களுக்கும் மேலான மற்றொரு காரணப்பொருளான கடவுள் சித்திக்காமல் ஒழியார். கடத்திற்குத் தண்டு முதலியவை காரணமென்றால் அதுகொண்டு குயவனையொழித்துவிடக்கூடுமோ? இக்காரணங்களுள் வேற்றுமை இது:— "பூதங்கள் முதற்காரண ; காலமுதலியவை துணைக்காரணம்; கடவுள் முதற்காரணமும் துணைக்காரணமுமாம்," என்பது. அவர் நிமித்தகாரணம் என்பது முன்னரே கூறப்பட்டுள்ளது. உபாதானமாதல் மேல்வரும். ஆதலால் அசேதனங்களான பூதங்கள் தனித்துக் காரணங்களாகமாட்டாவென்பது துணிபு. மற்ற கேள்விகளுக்குச் சமாதானம பின்வரும்.

ஸமஸ்கிருதபாஷை.

வியாகரணம்.

[தொடர்பு]

மாபாடியத்திற்கு முதல் வியாக்கியானம் "விவரணம்," என்று ஒன்றிருப்பதாயும், அஃதை இயற்றினவர் இன்னாரென்று துணியப்படவில்லையென்றும், அதன்காலம் தெரியவில்லையென்றும் தென்னாட்டின் மூதறிஞர் கூற்று. அதற்குப்பிறகு அம்மாபாடியத்திற்கு ஓர்வியாக்கியானஞ்செய்தவர் புகழ்பெற்ற கையடனார் என்பவர். அம்மகான் உபாத்தியஜையடரின் புதல்வர். இவர் வித்தியாப்பியாசஞ்செய்தது மகேசுவரபட்டாசாரியாரிடம். இவர் ஜாதியில் கௌடப்பிராமணன். வடநாடுகளில் ஜையடரென்பவர் பற்பல சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்து வைத்தியசாஸ்திரத்தில் விசேஷப்பயிர்ச்சியடைந்தவர். இவர் செய்த வைத்திய சாஸ்திரம் இப்பொழுதும் வடநாடுகளில் பிரசித்தி பெற்றுவருகிறது. அவருக்கு மூன்று பிள்ளைகள் உண்டு கையடர், மம்மடர், பல்லடர். இவர்களுள் உபாத்தியாய

[illegible]

[illegible]

[illegible]

"[illegible]"

[illegible]!!

[illegible]

மகேசுடாபட்டாசாரியரிடம் வித்தியாப்பியாசஞ் செய்து கையடர் என்பவர் மாபாடியத்திற்கு ஓர் வியாக்கியானஞ் செய்தார். அதற்கு மூலம் மும்முனிகளின் வசனங்களுட வாக்கியதீபமுமே. அப்பாடியத்திற்கு இவ்வியாக்கியானமில்லாவிடில் அதைப்பொருட்படுத்துவது மிகக்கடினம். அவருடன் பிறந்தவருள் ஸ்ரீ மம்மடோபாத்தியாயர் "ஸ்ரீகாவியப்பிரகாச,, மென்னும் பெருநூலையும், மற்றவர் ஓர் இலக்குமிஸ்துதியையும், மற்றுஞ்சில காவியங்களையும் இயற்றினர். இக்கையடனெழுதிய புத்தகத்தின் பெயர் மாபாடியப்ரதீபம் என்பது. அதைக் கையடமென்றே பெரும்பான்மையோர் வழங்குவது. அக்கிரந்தங்களைக் கணக்கிடின் (24,000) இருபத்துநான்காயிரங்களாகின்றன. இக்கையடனார் கொண்டமதம் ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் ஒப்பிய கேவலாத்துவிதமே. எங்ஙனமெனில், அப்புத்தகத்துவக்கத்திற்றான் "[illegible],, [illegible] [இ-ள்: சத்துக்கும் அசத்துக்கும் வேறாயபொருள்] என்றும் "அசத்தியம உபாதிகளில் அடங்கிய பிரமமதவமே சொல்லும் பொருளு,,மென்றும் அவர் கூறியிருத்தலாலென்க. இவருரையிலும் சிலவிடம் மூலத்திற்கு விரோதமிருப்பதாக பின்னர் வந்த நூலாசிரியரான ஸ்ரீபட்டோஜிதீக்ஷிதர், ஸ்ரீநாகேசபட்டாசாரியாரும் கூறுகின்றாராயினும், "கெடப்பவனை இடருவான் பல குணங்களில ஓர்குற்றமறையும் சந்திரனிடம் அழுக்குப் போல்,, எனக்குற்றமாகாது. இவர்காட்டியவழி நின்று பெருநூலியற்றிய ஆசிரியர்கள் அநேகர். அவர் புத்தகங்களும் அதன் விஷயங்களும் அவர் சரித்திரங்களும் பின்வரும்.

பிருகுவம்சம்

ருரு மகரிஷி சரித்திரம்.

ஐயா, இதிகாசத்தை அறிந்தவர்கள் கூறுவது இது:— பிருகுமகரிஷியின் அருமைப் புதல்வராகிய சியவனமகாரிஷி 'சுகன்னியா,, என்னும் பெயருடைய ஓர் பெண்ணை மணம்புரிந்து அவளிடம் பிரமிதி என்னும் ஓர் புத்திரனைப் பெற்றார். அப்பிரமிதி மகாரிஷி "ஸ்ரீகிருதாசி,, என்னும் தேவஸ்திரீயுடன் கூடிவாழ்ந்து ருரு என்னும் புத்திரனைப்பெற்றார். அதேசமயத்தில் கலவிகேள்விகளிற் சிறந்தவரான ஸ்தூலகேசர் என்னும் ஓர் மகரிஷி உலகத்தில் நல்லபிரசித்திபெற்று வாழ்ந்திருந்தார். இங்ஙனமிருக்க, விசுவாவசு என்னும் ஓர் கந்தர்வன் 'மேனகை,, என்னும் அப்ஸரஸுடன் லீலார்த்தமாக ஸ்தூலகேசமகரிஷியின் ஆச்சிரமத்தில்வந்து அவ்விடத்தில் அம்மேனகைஓர் பெண்மணியைப்பெற்று அவ்விடத்திற்றானே விட்டுவிட்டுப்போக, பரமகிருபாநிதியான ஸ்தூலகேசரிஷி கண்டெடுத்துத்தமது ஆச்ரமத்துக்குச்சென்று வெகு ஆதரவுடன் அப்பெண்ணைசகல சம்ஸ்காரங்கள்செய்து வளர்த்துவந்தார். பிறகு அப்பெண் உலகத்திலுள்ள பெண்களுள் அதிக ரூபமுடையவளாதலபற்றி "பிரமத்வரா,, எனப்பெயரிடப்பட்டாள். [பிரமதா = பெண்கள், வரா = சிறந்தவள்]

பிறகு வெகுகாலஞ்செல்ல ஓர் சமயம் ருருமகரிஷி அக்கன்னியைக்கண்டு தமக்கில்லறத்துணையாக இவள் இருக்கவேண்டுமென்றெண்ணித் தமது பிதாவினிடம் இவ்விஷயஅபிப்பிராயத்தைத் தமது சிநேகிதர்களால் தெரியப்படுத்தினர். அவரும்

[illegible]

தனதுமனைவியுடன்கூடி அத்தூலகேசர் ஆசிரமத்திற்சேகும் அம்மகரிஷியினது பெண்ணைத்தமது குமாரனுக்குகொடுக்கும் படிகேட்க, அவரும் "அங்ஙனமாக,, வென்று மனக்களிப்புடன்ஒப்புக்கொண்டு இருவரும்சம்மதித்து விவாகத்திற்கு ஓர்சுப தினங்குறித்துவைத்தார்கள். பிறகுகுறித்தவிவாககாலத்திற்குச் சமீபத்தில்ஒருதினம் விளையாடிக்கொண்டு தனதுதோழிகளுடன்போகையில, ஏதோ ஒரு 'கயிறு, என்றெண்ணி கீழேபடுத்திருந்த ஓர் பாம்பை மிதித்தாள். அந்நிமிஷமே கோபங்கொண்ட அன்னாகம் அவளைக்கடிக்க, உடனே அந்நங்கை தன்னுயிரைத்துறந்து பார்ப்பதற்கு முன்கொடுத்துவந்த ஆனந்தத்திற்குப் பதிலாக வெகுதுயரத்தை உண்டாக்கினாள். உடனேயூத்திரேயர், குச்சர், சங்கர் முதலிய மகரிஷிகள்கண்டு பரிதபித்துப்போனார்களேயன்றி வேறுயாதும்செய்தாரில்லை. இங்ஙனமிருக்க, பிரமதிமகரிஷியும் தனது குமாரருடன் அவ்விடம் சென்று அம்மங்கையைக்கண்டு மனங்கொள்ளாத்துயரமடைந்தார். உடனே ருரு அவ்விடம் விட்டுக் கடுங்கானகம் சென்று வெகுமனவருத்தத்துடன் கடவுளைத்தியானித்து சபதம் செய்தார். அதாவது: 'யான் இதுகாறும் செய்த தவமும் குருபத்தியும் சத்தியமானால்எனதுபார்யைபிழைக்கவேண்டு,மென்பது. அவ்விதம்கூறியும் தமது சபதம் சித்தியாதுபற்றி வருந்தமுற்ற ருருமகரிஷிக்கு நேரில் ஓர் தேவதூதன்வந்து இவ்வாறுரைத்தான்: ஓருரு மகரிஷியே! ஏன் வீணில்லாசதறுகிறாய்? மாண்டவுயிர் மீண்டும்வருமா? அதற்கு நீர்செய்வதுயாது? விவேகிகள் இவ்விதம் செயற்பாலதன்று; இனிநீர் அதைப்பற்றி துக்கிப்பது வாளாமுடியும்; ஆயின் ஓருபாயமுண்டு. அதைநீர் செய்யக்கூடுமாயின் உரைப்பேன் என்றான். உடனே ருரு சந்தோஷித்து அதைச்சொல்லின் செய்வேன் என்றார். அத்தேவதூதன் "உனதுஆயுளில் பாதிகொடுப்பாயாயின் அவள் உயிர்த்தெழுவாள்,, என்றான். உடனே அவ்விதமே தனது ஆயுளை அம்மங்கைக்குப்பகுத்துஅளித்ததாய் ருரு பிரதிக்ஞைசெய்தார். உடனே அத்தேவதூதன் எமதர்மராஜனிடம் சென்று 'ஐய, தருமராஜா! ருரு தமது பாரியைக்குத் தன்னாயுளில் பாதியளித்தார்; இனி அவள் உயிர்த்தெழும்படி உத்திரவளிக்கவேண்டும்,, என்றான். இதைத் தருமராஜன் ஒப்பியஉடனே "தூங்கியெழுந்ததுபோல்,, அப்பெண்ணெழுந்தாள். உடனே மனமகிழ்ந்து மகரிஷிகளெல்லோரும் கூடித் திருமணக்கோலத்தைச்சிறப்பித்தார்கள். ருருமகரிஷியும் அப்பெண்ணை அடைந்து மனமகிழ்ந்து ஆசிரமம்சென்று இல்லறத்தை நிறைவேற்றினார். அதுமுதல் பாம்புகளைக் கண்டவிடமெல்லாம் கொல்வதாய் விரதம்கொண்டு பலபாம்புகளைக்கொன்றார். பிறகு ஓர்தினம் ஓர்காட்டிற்சென்று ஓர் நீர்ப்பாம்பைச்சண்டு அடிக்க உத்தேசித்துத் தடியை ஓங்க, அது "ஐயா! இமிசிக்கவேண்டாம்; அபராதம்செய்யாதஎன்னை ஏன் இமிசிக்கின்றீர்?,, என்றது. அதற்கு ருரு "எனது தாரியைப் பாம்புகடித்ததுமுதல் பாம்புகளைக் கொல்வதாய் ஓர்விரதம் கட்டிக்கொண்டேன்,, என்று உத்திரமளிக்க, "ஐயமகரிஷியே!பாம்பின்ஜாதியிற்பிறந்ததை மாத்திரமேயன்றி நீர்ப்பாம்புகளை ஏன் இமிசிக்கிறீர்? அவைகட்கு விஷமில்லையே,, என்று சொல்லியது. அதைக்கேட்டு பயந்துவியந்து ருரு நீர்யாவர்? என்று அப்பாம்பினைவினவ, அந்நீர்ப்பாம்பு தன்வரலாற்றை இவ்விதம் சொல்லியது:

பின்வரும்.

கோபுசெட்டிபாளையம் வாலிபர்கள்சபையில், சுப்பிரமணியசாஸ்திரிகளவர்களால் செய்யப்பட்டவுபந்நியாசம்.

(முன்றொடர்பு)

பிரமம் தானே நித்தியம், பூர்ணம், சுத்தம், அதிசூக்ஷ்மம், சச்சிதானந்தம், அத்துவிதம், சத்தியம், ஞானம், அநந்தம், நிகுணம், நிஷ்கிரியம், நிர்விகல்பம், நிரஞ்சனம் இவை முதலிய அநேகசப்தங்களால் வேதாந்தசாஸ்திரத்தில் விசேஷிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாமங்களெல்லாம் நாம் தெரிந்துகொண்டு விவகரிப்பதற்காகச் சொல்லப்பட்டிருக்கின்றதேயன்றி அதற்கு நாமமாவது ரூபமாவதுகிடையாது. அது ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியுமல்ல, அணுவுமல்ல, பெரிதுமல்ல, குட்டையுமல்ல, நெட்டையுமல்ல, பிறந்ததுமல்ல, நாசமுடையதுமல்ல; இப்படிப்பட்டதென்று வாயாற்சொல்லவும், மனதால் நினைக்கவும் கூடாது. தனக்குத்தானே விளங்கிக்கொண்டிருப்பது அந்தப் பரப்பிரமம் ஒன்றேயுளது; இரண்டாம் பதார்த்தம் கிடையாது; அவர்தான் ஆத்மா.

ஆக்ஷேபம்.

இப்பொழுது விசித்திரமாகிய பிரபஞ்சம் பிரத்தியக்ஷமாயிருக்க, பிரம்ம அதாவது ஆத்மாவைத்தவிர இரண்டாம்பதார்த்தம் இல்லவேஇல்லையென்று எப்படிச்சொல்லலாமென்றால்,

சமாதானம். கானலில் ஜலமும், சுக்தியில்வெள்ளியும், கட்டையில் கள்ளனும், கயிற்றில் பாம்பும் மயக்கத்தினால் காணுவதுபோல அநாதியாயிருக்கிற அஞ்ஞானத்தினால் பிரமத்தில் ஜகத்து காணப்படுகிறதென்றும், ஆனால் அது பொய்யென்றும் சுருதி யுக்தி அநுபவங்களால் பெரியோர்கள்கண்டு சித்தாந்தம்செய்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட பிரமத்தினிடத்தில் ஜீவேசுவர ஜகத்துக்கள் ஆரோபிக்கப்பட்டனவென்று சொல்லவேண்டியது அவசியமாய்ப் பிரகிருதத்தில் காணப்படுகிறபடியால் முந்தி ஈசுவாருடைய பிராதுர்ப்பாவத்தைச் சொல்லுகிறேன்.

௨-வது ஈசுவரர் உண்டென்பது.

மேற்கூறிய நிர்க்குணபிரமத்தினிடத்தில் புஷ்பத்தில் வாசனைபோலும், ஜலத்தில்குளிர்ச்சிபோலும், அக்கினியிற்சூடுபோலும், வாயுவில் சலனம்போலும், கல்லில் கடினம்போலும், சிறிய ஆலம்விதையில் பெரியவிருக்ஷம்போலும், தேகத்தில் சைதன்னியம்போலும், சுக்லசோணிதத்தில் தேகம்போலும் ஒரு சக்தியுண்டு. இதற்கு மாயையென்றும், அவ்பக்தமென்றும் பெயர்; இந்த அவ்யக்தத்தில் சகலஜீவர்களும் தங்கள்தங்களுடைய வாசனையுடன்கூடி சுஷுப்தியைப்போல பொருந்தியிருப்பார்கள். ஷை அவ்பக்தத்துக்குக் காலதத்துவமென்றும் பெயருண்டு. இந்த அவ்யக்தமான மூலபிருகிருதியானது பிரமசமூகத்தினால் தனது முதன்மையின் சுவபாவத்தைவிட்டு மூன்றுகுணங்களும் வெளிப்படும். இந்த மூன்றுகுணங்களுக்கும் வியக்தமென்றுபெயர். அந்த மூன்றுகுணங்களின் நாமதேயங்கள் என்னவென்றால்:

௧- சுத்தசத்துவகுணம்.
௨- அசுத்தசத்துவம் இரஜோகுணம்.
௩- தமோகுணம் ஆக குணங்கள் மூன்று.

இம்மூன்றுள் முதன்மையான சுத்தசத்துவகுணம மாயையாகும். இந்தசத்துவகுணத்தில் பிரதிபலித்த பிரமத்தின் நிழலே அந்தர்யாமி மாயாசம்பந்தமான எந்தகுணங்களுடன்றூத நிமித்தகாரணமான ஈசுவரன் இவரே; பஞ்சபூத சிருஷ்டிக்கு அதிகாரியானஈசன், இந்த ஈசுவரனுக்கு இம்மாயையே சுழுப்திபவஸதையாம்; இஃதே காரணச்சரீரம்; இதுவே ஆனந்தமயகோசம்; இவர்தானே சகுணபிரமமென்றும, மகாமாயன், சர்வாந்தரியாமி, பகவான், சிருஷ்டியாதி அநுக்கிரகாந்தமான பஞ்சகிருத்தியபரரான ஈசுவரன், சுவாமி, விஷ்ணு, பிரமன், ருத்திரன் இப்படியெல்லாம் சொல்லப்பட்டு வருகிறார். இவரால் ஜகத் சிருஷ்டிக்கப்பட்டதென்று இதனடியில சொல்லப்படுகின்றது.

௩.வது ஜீவசிருஷ்டியும், ஜகத்சிருஷ்டியும்.

முற்கூறியபடி மாயையில் பிரதிபிம்பித்த ஈசுவரரானவர் பல உருவங்களை எடுக்கிறேனென்று யோசித்தார்; இவர் ஆதியந்தமில்லாதவராயினும் மாயையைவகித்து அநேகரூபமாகிறார் இவர் சமஸ்தபிரபஞ்சத்தையும்க்ரீடார்த்தமாக சிருஷ்டிக்கிறார் அதன் விபரம் இதனடியில் வருமாறு. முன் கூறிய முக்குணங்களில் இரண்டாவதான இரஜோகுணம் (அதாவது அவித்தை) இந்த அவித்தையில் பிரதிபலித்த சிற்சாயைஞானப்பிரதிபலமே அனேககோடி ஜீவர்களாம். யாவையுமிறந்த சுஷுப்தியையபிமானிக்கும் ஜீவர்களுக்கு அவ்வவசரத்தில் பிராக்ஞனென்றுபெயராம். அவித்தையைசேர்ந்திருக்கிற ஜீவர்களுக்கு அவித்தையே ஆனந்தமயகோசம். அஃதே சுஷுப்தியவத்தையாம்; அஃதே காரணசரீரமாம்; இதுபரியந்தம் வழுதுமான சத்துவரஜோகுணத்திலுண்டான காரணசரீர வித்தியாசத்தைச் சொன்னோம். சூட்சுமசரீர வித்தியாச முண்டான மார்க்கத்தையும் இனிச் சொல்லுகிறோம். ஜீவேசுவராளுக்கு சூட்சுமசரீரத்தியாசம் உண்டான முறைமையைச் சொல்லத்தொடங்கி முன்பு சக்திகளின் தோற்றமுறைக்கப்படுகின்றது

கைவல்லியம் தத்துவவிளக்கப்படலம்.

ஏமமாயாவினோத வீசனாருளினாலே
பூமலியுயிர்கட்கெல்லாம் போகசாதன முண்டாகத்
தாமதகுண மிரண்டு சத்தியாய்ப் பிரிந்துதோன்றும்
வீமமா மூடலென்றும் விபுதமாம்தோற்றமென்றும்.

[இ-ள்] மாயையை விளையாட்டாகவுடைய ஈசுவரனது கிருபையினால் ஜீவர்களனைவருக்கும் அநுபோகசாதன முண்டாகும்பொருட்டுத்தமோகுணமானது பயங்கரமான ஆவரணமென்றும், ஞானவிதமாகும் விக்ஷேபமென்வும் இருசக்திகளாய்ப் பிரிந்துதோன்றும். உயிர்கட்கெல்லாம் போகசாதனமுண்டாகவென்பதினால் ஜீவர்கள் சமஷ்டியே ஈசுவரனாதலின் அவ்வீசுவரனுக்கும் கொள்க. [ஆவரணத்தை அறிவின்மையாகவும் விட்சேபத்தை அறிவாகவும் அருத்தமென்றுகொள்க]

விட்சேபசக்தியில் தன்மாத்திரையான சூட்சுமபூதத்தின் உற்பத்திகூறல்.

விட்சேபசக்தியில் சப்ததன்மாத்திரையான ஆகாசமும், அவ்வாகாசத்தில் ஸ்பர்சதன்மாத்திரையான காற்றும, அக்காற்றில் ரூபதன்மாத்திரையான தீயும், அவ்வக்கினியில் ரசதன்மாத்திரையான அப்பும், அவ்வப்பில் கந்ததன்மாத்திரையான பிருதிவியுமுளதாமென்று சொல்லப்பட்ட இவ்வைந்தும் சூட்சுமபூதங்களாம். இந்த தன்மாத்திரைகளில் சூட்சுமசரீரங்கள்

போகசாதனமாக உண்டாகும். தன்மாத்திரையில் சத்துவகுணத்தில் ஞானேந்திரியம் ஐந்தும், மனம், புத்தி, அந்தக்கரணமும் முண்டாயின. தன்மாத்திரையின் ரஜோகுணத்தில் கன்மேந்திரியங்களைந்துமாம். அதாவது: பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்கிறபஞ்சவாயுக்களும் உபவாயுக்களாகிய நாக, கூர்ம, கிருகர, தேவதத்த, தனஞ்செயனென்கிற ஐந்தும் அந்தர்பூதமாம். இவைகளுக்கு லிங்கதேகமெனப்பெயர்வழங்கும். சிலநூலாசிரியர் சூட்சுமதேகம் இருபத்துநான்கு தத்துவம் என்றதை இவ்விடத்தில நாம்விஷயமைந்தையும் ஞானேந்திரியத்திலடக்கியும், அகங்காரத்தையும், சித்தத்தையும் மனம்புத்தியிலடக்கியும் பதினேழாகக்கூறினேம்.

சூட்சுமசரீரத்தில்அபிமானித்த ஈசுவரனுக்கு ஹிரண்யகர்ப்பனென்றும், ஜீவனுக்குத் தைஜஸனென்றும் பெயராம். அந்தசூட்சுமசரீரத்துக்குப் பிராணமய, மனோமய, விஞ்ஞானமயமெனக்கோசம் மூன்றாம். இது சொப்னவஸ்தையாம். தன்மாத்திரைகள் சூட்சுமமாதலால் அவைகளை சூட்சுமபூதங்களெனவும், அவற்றின் கூடிப்பை சூட்சுமசரீரமெனவும், அச்சூட்சுமசரீரத்தை யபிமானிப்பவர்களை ஹிரண்யகர்ப்ப தைஜஸரெனவும், அஃது மனோராஜ்பம்செய்கலை சொப்பனவஸ்தையெனவும், அஃது பிராணமனே புத்தியாதிகளாகத் தன்னை மறைத்தலை கோசமெனவும்கொள்க. இசமட்டில் சூட்சுமசரீரவித்தியாசம் சீவ ஈசுவரருக்குச் சொன்னேம். இனி பஞ்சஸ்தூலபூதபௌதிகமான சிருஷ்டியைச்சொல்லத்தொடங்கி அஃதுண்டாகிறதற்கேதுவும் கூறப்படுகின்றது.

சூட்சுமதேகத்திற் சேர்ந்திருக்கிற ஜீவர்களுக்கு ஸ்தூலதேகமும அனுபோகமும் உண்டாகும்படிபாதுகாக்கும் இவ்வீசுவரன் பஞ்சீகரணம் செய்தனர். தேகமும் அனுபோகமும் என்ற உம்மையால் அண்டமும் புவனமுங்கொள்க.

பஞ்சீகரணமும் அவற்றினலாகியகாரியமும் கூறல்.

[கைவல்யம்]

ஐந்துபூதமும் பத்தாக்கிய வைபாதிநன்னான்காக்கி
நந்துதன் பாதிவிட்டு நாலொடு நாலுக்கூட்ட
வந்தன தூலபூத மகாபூதமவற்றினின்றுந்
தந்தன நான்காந்தூல தனுவண்ட புவனபோகம்.

[இ-ள்] தமோகுணப் புங்காகிய சூட்சுமபூதங்களைப் பத்துபங்குசெய்து அவற்றிற் பகுத்தபாதி ஒவ்வொன்றை நான்குநான்கு செய்து சேடில்லாத தன்னப்சமான பாதியைவிட்டு மற்றநாலொடு நான்குக்கூட்ட ஸ்தூல பூதங்களினின்று உண்டாக்கபபட்ட ஸ்தூலசரீரமும், அண்டமும், புவனமும் அதாவது அவற்றிலுள்ள பதப்ராப்திஸ்தானமும், போகங்களு மாகநான்கெனக்கொள்க. இந்தஸ்தூலதேகத்தினல்வருங்கற்பனை நாமங்கள் யாதெனில் வியஷ்ட்டியான ஸ்தூலத்தையபிமானிக்கிறவனுக்கு விசுவன் என்னும் வியாவகாரிகஜீவன் என்னும் சமஷ்டியான ஸ்தூலசரீரத்தையடைந்து அபிமானிக்கிறஈசுவரனுக்கு விராட்புருடனென்றும் பெயராம். ஸ்தூலம் இவ்விருவருக்கு ஸ்தூலதேகம, ஜாக்கிரஅவஸ்தை இவ்விருவருக்கும் ஜாக்கிரமாம். இதுவேஅன்னமயகோசமாம். இதுவரைஸ்தூலசரீர உற்பத்தியையும் அபிமானிகளையும் கோசமும் இவற்றின் அத்யாஸதையுஞ்சொன்னேம்.

ஆக்ஷேபம்.

ஜீவேசுவரர்களுக்கு உபாதி ஒன்றாயின் அவர்கள் பேதமறிவதெப்படியென்றால்:

[கைவல்யம்]

சீறிய வீசனார்க்குஞ் சீவர்க்கு முபாதியென்றே
லாரிய குருவேபேத மறிவதெப்படி யென்றக்கார்
காரிய வுபாதிஜீவன் காரணவுபாதியீசன்
வீரிய மிகுசமட்டி வியட்டியாற் பேதமாமே.

சமட்டியினல் ஈசுவரனுக்குக் காரணோபாதியும் வியஷ்டியினல் ஜீவனுக்குக் காரியோபாதியுமாம்.

இதுவரையிலசொன்னஅத்யாரோபமான ஜகஜீவபரங்களை திருச்சய மென்றும் சொப்பனம்போலமித்தையென் றறிந்தவன் ஞானியாம்; மேகம் நிறைந்திருக்கிற மழைக்காலம்போய் சரற்காலத்தில் தெளிந்த ஆகாயம்போல அற்புதமான மோக்ஷமடையும் அபவாதவழியும் இனி சொல்லப்படுகிறது.

சர்ப்பமல்ல கயறு என்றாற்போலவும், வெள்ளியல்ல சுத்தியென்றாற்போலவும் ஆரோபத்தைநீக்கி அதிஷ்டானத்தைக் காணபித்ததாமெனத் தெரிந்துகொள்ளவும். பின்னும் தன்னிடத்துக் கற்பிதமான ஜகஜீவபரங்களைத் தனதுருவமாக ஒடுக்கிக்காண்பதே அபவாதயுக்தியென்பதாம்.

முற்கூறிய ஆவரணசக்தியின் இலக்ஷணம்யாதெனின் அதைச்சொல்லுகிறபிரகாரம் இத்னடியிற்காண்க.

தனக்குத்தானே சமானமாகிய ப்ரம்மமயனான ஈசனையும், தானுகியகூட்டஸதரை தரிசித்தஞானிகளையும் அல்லாமல்நாஸ்திகபாதி என்னும் இல்லை. இருக்கிற் காணு என்கிற இருமுகத்தினல் ஜீவர்களின அகத்தில்விளங்கிய ஞானதிருஷ்டியானது தெரியாதபடி ஆகாயம், பூமி, திக்குகளை மூடுகின்ற மழைக்காலத்து இராத்திரியின் இருட்டைப்போல மறைக்கும்கூட்டஸ்தப்ரம்மங்களை மறையாமல் அவைகளின்ஆரோபமானஜீவேசுவரனை மறைக்குமென்பதாம். அதிஷ்டான ஆரோபங்களின்பேதம தெரியவொட்டாமல் நாஸ்தி, நரபாதியென்னும் இரண்டுமார்க்கங்களால் ஞானதிருஷ்டியை மறைத்தல் ஆவரண சக்தியின் சுபாவமாம.

ஆக்ஷேபம்.

அதிஷ்டானதிஷ்டி சாமான்யமாகத் தோற்றியபின் அஃது மறைபடும்போதும் மறைபடாதபோதும் ஆரோபம் பானமாக [அதாவது தோற்ற] கணக்கில்லையென்றால்,

சமாதானம்.

அதிஷ்டான இலக்ஷணத்தை இரண்டுவிதமாகச் சொல்லுகிறேன்.

கைவல்யம் தத்துவவிளக்கபடலம்.

ஆதார மறைந்துபோனு லாரோபமெங்கே தோன்று
மாதார மறைபாதாயின் ஆரோப மில்லையேயென்று
லாதாரஞ் சமம் விசேடமென விரண்டுகூறு
மாதாரஞ் சமமாமெங்கு மாரோபம் விசேடமாமே.

[இ-ள்] பிம்பம் மறையுமானல் பிரதிபிம்பமெப்படித்தோன்றும் பிம்பம் மறைவில்லையெனில் அப்போது பிரதிபிம்பம் இல்லையென்றால் ஆதாரமானது சமம், விசேஷமென இரண்டு வகைப்படும். அவற்றுள் சமமானது எவ்விடத்திலுமுள்ள ஆதாரமாகும். விசேஷமானது கற்பிதமாமெனத்தெரிந்துகொள்க.

வரும்.

இந்து டிராக்ட் சொஸைட்டி.

(இந்து லகுலேக சங்கம்.)

இஃது 1887௵ ஏப்ரல்௴ 27௳ ஸ்தாபிக்கப்பட்டது

இச்சங்கத்தின் கருத்து:— இந்துமதத்தைப் பரவச்செய்து, அதன் விரோதிகளைக் கண்டித்துத் தேசக்ஷேமத்தை நாடுதலாம். இச்சங்கத்தில் மெம்பர்களாகச்சேர விருப்பமுள்ளவர்கள் ௵ 1-இக்குறைந்த சந்தா 1—4—0 முன்பணமாகக்கட்டவேண்டியது.

ஏப்ரல்௴ முதல் ஒவ்வொரு வருஷம் மார்ச்சு௴ வரையில் அந்தந்தவருஷமுடிவாகும்.

அக்கிராசனாதிபதி:— R. சிவசங்கரபண்டியா.
B. A. F. T. S. அவர்கள்

வெளியூர் உப அக்கிராசனாதிபதி:— சிதம்பரம் ப்ரம்மவித்தியாபத்திராதிபர் ப்ரம்மஸ்ரீ து. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்கள்

காரியதரிசி:— ஸ்ரீமான் M. A. கிருஷ்ணமாசாரியார்
B. A. அவர்கள்.

இந்தச் சங்கத்தைப்பற்றி மற்றவிஷயங்களை அறியவிரும்புபவர்கள், அரையணாஸ்டாம்பாவது, ரிப்ளை கார்டாவது அனுப்பிக் கேட்டுக்கொள்ளலாம்.

“ ஸ்ரீ [illegible] ”

[illegible]

[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௧	௦
[illegible]			
[illegible]	௨	௦	௦
[illegible]	௦	௧௨	௦
[illegible]	௦	௮	௦
[illegible]	௦	௪	௦
[illegible]	௦	௧	௦
ஶ்ரீநாராயணதத்வ[illegible]	௦	௭	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௧	௦	௦
[illegible]	௦	௨	௦
[illegible]	௦	௧	௦
ஶிவகர்ணாம்ருதம்.	௦	௨	௬
[illegible]	௦	௧	௦
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௦	௬
[illegible]	௦	௮	௦
[illegible]			
[illegible]	௦	௫	௦
[illegible]			
[illegible]			
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௬	௦
[illegible]	௦	௧	௦

[illegible]) ([illegible]) ([illegible] ஸ்ரீநிவாஸகவி [illegible]) ([illegible]) (	O	க	O
ஸ்ரீ [illegible]) ([illegible] கவி [illegible] ஸ்ரீ) ([illegible]) ([illegible]) (	O	க	சா
ஸ்ரீ [illegible] கவி [illegible]) ([illegible]) (	O	ரு	O
வேங்கடேஶார்யக்ருதம் (தயாஶதகம்)	O	க	O
வேங்கடேஶார்யக்ருதா ([illegible])	O	O	சா
வேங்கடேஶார்யக்ருதா ([illegible])	O	க	சா
வேங்கடேஶார்யக்ருத [illegible]	O	O	சா

—[illegible]—

[illegible]	O	ரு	O
[illegible]) (ஸ்ரீ [illegible]) ([illegible] ((	O	அ	O
[illegible] ([illegible])	O	O	சா
ஸ்ரீ [illegible] கவி [illegible]) ([illegible]) (	O	ரு	C
[illegible] ([illegible])	O	கO	O
[illegible]) ([illegible]) (	O	க	சா
[illegible] ([illegible]) [illegible]	O	ரு	O

Bible Disector (English)	0	0	9
One Hundred anb Fifty Contradictions of the Bible (English)	0	1	0

கிறிஸ்தவர் விடைகளின் மறுப்பு.

இஃது ஓர் சம்ஸ்கிருத பண்டிதரால் எழுதப்பட்டது.

விலை அணா 2.

ஆன்மாவும் சரீரமும் இஃது நாஸதிகர் சேழ்விக்கு விடை	,,	க	,,
சகாதேவசாஸ்த்திரம்	,,	க	
நீதிக்கீர்த்தனை	,,	க	சா
சன்மார்க்கபோதனி	,,	,,	ரு
சீகாழித்தலபுராணம்	,,	அ	[illegible]
வேளூர்புராணம்	,,	சா	,,
கந்தபுராணநவநீதம்	,,	கஉ	,,
மனுமுறைகண்டவாசகம்	,,	ச	,,
கிறிஸ்து மதகண்டனம்	,,	க	,,
சிவனுந்தேவனுளென்னுந்தியா நாவுக்காப்பு	,,	,,	சா
யேசுக்கிறிஸ்து மனிதனே	,,	,,	சா
நீதிநெறிவிளக்கவுரை	,,	ச	,,
சிவோத்கருஷதீபிகை	,,	க	,,
திருமுருகாற்றுப்படை பரிமேலழகருரையுடன்	,,	உ	
திருத்தணிகைபதிற்றுப்பத்தந்தாதி	,,	க	
சதாசிவரூபம்	,,	உ	
நெஞ்சுவிடுதூது	,,	,,	சா
உருத்திராக்கமாலை	,,	,,	சா
திருநாவுக்கரசர்திவ்யசரித்திரம்	,,	,,	ரு

விவேகபோதனி

நே. க. உ. ரு. ச. ரு. சா. பிரதி 1.க்கு விலை பை மூன்று

விவேகசுந்தரம்

நெ. க உ ரு ச ரு சா எ அ.

பிரதி 1-க்கு பை 0 o 3

கல்விக்களஞ்சியம் கடன்பட்டகந்தன்கதை	பை	ஆறு	
புருஷத்துவேஷபூதகிகதை	பை	ஆறு	
திருஞானசம்பந்தசுவாமிகள்சரித்திரம்	0	0	3
சுந்தரமூர்த்திசுவாமிகள் சரித்திரம்	0	0	3
இந்துஜெயபேரிகை பிரதிஒன்றுக்கு விலை	0	o	3
ஜனோபசாரம்	,,	க	,,
வச்சிரடங்கம்	,,	,,	சா
வியாதிமூலங்கள்	,,	,,	ரு

ஒருபைபுத்தகங்கள்.

சத்துருசகவாசம்நித்தியசங்கடம்
நன்மை நலந்தரும்
பேராசை பெருநஷ்டம்
அடாதுசெய்தோன் படாதுபடுவன்
மனக்கவலைபலக்குறைச்சல்
குணபூஷணிசரித்திரம்
பாதிரிமார்ஸ்கூலில் பெண்களைஅனுப்பலாமா

Printed and Published for the Proprietor at the Brahmavidya Press. Chidambaram.